# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
## இலகுவழி மாதிரிப் பரீட்சை 1 இலிருந்து 30 வரைக்கான கடினமான வினாக்களுக்கு இலகுவழி விடைகாணும்
## ஆசிரியர் P. அம்பிகைபாகன் அவர்களின் தரம் 5 மாணவர்களுக்கு உகந்த விளக்கங்கள்

34

17) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் மூன்று நீலநிறப் பந்துகளும் இரண்டு மஞ்சள் நிறப் பந்துகளும் ஒரு வெள்ளை நிறப் பந்தும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரு நீல நிறப்பந்தை எடுப்பதற்கு ஒரே தடவையில் குறைந்த பட்சம் எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?

1. 3  2. 4  3. 5  4. 6

**01. பரீட்சை எண் : 12**
**வினா இலக்கம் - 17**

விளக்கம் :


**4 பந்துகள்**

18) கூலி வேலை செய்யும் தொழிலாளி ஒருவன் நாளாந்தம் ரூபா 100யை உழைப்பான். அவனுடைய மனைவி நாளாந்தம் ரூபா 50யை செலவு செய்வாள். எத்தனையாம் நாள் அவன் பணம் வைக்கும்போது பெட்டியில் ரூபா 1000 ஆகிவிட்டதைக் காண்பான்?

1. 18ந் நாள்  2. 19ந் நாள்  3. 20ந் நாள்  4. 21ந் நாள்

**02. பரீட்சை எண் : 12**
**வினா இலக்கம் - 18**

விளக்கம் :
**18 ஆவது நாள் 18 x 50 = 900 ரூபா**
**19 ஆவது நாள் = 100 ரூபா**
**19 ஆவது நாள் (900+100) = 1000 ரூபா**

19) விமலனும் கமலனும் குளிர்பானம் அருந்தும் போட்டியில் பங்கு பற்றினார்கள். கமலன் அரைப்போத்தல் பானம் குடிப்பதற்குள் விமலன் ஒரு போத்தலைக் குடித்து முடித்து மற்றைய போத்தலில் அவன் குடித்தளவும் குடித்துவிட்டான். இதற்கேற்ப.

1. விமலன் கமலனைப் போல் மூன்று மடங்கு வேகத்தில் குடித்தான்.
2. கமலன் விமலனைப் போல் மூன்று மடங்கு வேகத்தில் குடித்தான்.
3. விமலனும் கமலனும் சமமாகவே குடித்தார்கள்.
4. விமலன் கமலனைப்போல் நான்கு மடங்கு வேகத்தில் குடித்தான்.

**03. பரீட்சை எண் : 12**
**வினா இலக்கம் - 19**

விளக்கம் :



**பின்வரும் தகவல்களைக் கொண்டு 20ஆம் 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | | | |
|---|---|---|---|
| பேனா | 1 | பேனா | 3 |
| பென்சில் | 1 | பென்சில் | 2 |
| விலை ரூபா. | 17.00 | விலை ரூபா. | 47.00 |

20) பேனா ஒன்றின் விலை யாது?
1. ரூபா.10.00  2. ரூபா.12.00  3. ரூபா.13.00  4. ரூபா.4.00

21) பென்சில்ஒன்றின் விலை யாது?
1. ரூபா.10.00  2. ரூபா.12.00  3. ரூபா.13.00  4. ரூபா. 4.00

**04. பரீட்சை எண் : 12**
**வினா இலக்கம் - 20, 21**

விளக்கம் :

**01.** (பே 3, பெ 2, 47.00) − (பே 1, பெ 1, 17.00) = (பே 2, பெ 1, 30.00)

**02.** (பே 2, பெ 1, 30.00) − (பே 1, பெ 1, 17.00) = (பே 1, ------, 13.00)

**03.** (பே 1, பெ 1, 17.00) (பே 1, ------, 13.00) (------, பெ 1, 4.00)

9) ஐந்து என்னும் இலக்கத்தை மூன்று தடவைகள் எழுதினால் வரும் எண்ணின் பெறுமானம்
1. 500 இலும் கூடியது  2. 500 இலும் குறைந்தது  3. 1500 இலும் கூடியது

**05. பரீட்சை எண் : 13**
**வினா இலக்கம் - 09**

விளக்கம் : **555 ← 500 இலும் கூடியது**

12) திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, ......................................... என்ற தொடரில் அடுத்து வர வேண்டியது.
1. சனிக்கிழமை  2. ஞாயிற்றுக்கிழமை  3. திங்கட்கிழமை

**06. பரீட்சை எண் : 13**
**வினா இலக்கம் - 12**

விளக்கம் : **திங்கள் (செவ்வாய் இல்லை) புதன் (வியாழன் இல்லை) வெள்ளி (சனி இல்லை) ஞாயிற்றுக் கிழமை**

14. 

இது A, B, C, D, E எனும் ஐந்து நகரங்களைக் குறித்துக்காட்டும் வரை படம் ஆகும். ஒருவன் A நகரத்திலிருந்து ஆரம்பித்து B, C, D, E நகரங்களுக்கூடாக மீண்டும் A யை அடைவதற்கு எத்தனை கிலோ மீற்றர்கள் பயணம் செய்ய வேண்டும்?

1. 34km  2. 28km  3. 38km  4. 14km

விளக்கம் : **ஆரை** 4km **கால் வட்ட ஒழுக்கு** 10km **எனவே ஒரு சுற்று** 4+4+10+10+10=38km

**07. பரீட்சை எண் : 14**
**வினா இலக்கம் - 14**

---

**மேசைத் தராசுகளில் காணப்படும் பொருட்களின் நிறைகளை அவதானிக்குக.**



**இதன்படி கீழே தரப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளைத் தெரிவு செய்க.**

15.  = 1. 6kg  2. 7kg  3. 8kg  4. 5kg

16.  = 1. 4kg  2. 5kg  3. 6kg  4. 8kg

**08. பரீட்சை எண் : 14**
**வினா இலக்கம் - 15, 16**

விளக்கம் : **ஐஸ்கிறீம்** 2kg, **ஐஸ் கிறீம், பார்சல்** 5kg **எனவே பார்சல்** 5kg - 2kg = 3kg, **ஐஸ்கிறீம், பார்சல், கேக்** 9kg **எனவே கேக்** 9kg - 5kg = 4kg
**15இல் பார்சலும் கேக்கும்** = 3kg +4kg = 7kg ,
**16இல் கேக், ஐஸ்கிறீம் இரண்டுமாக மூன்று பொருட்களும்** 2kg+3kg+3kg=8kg

---

17. பின்வரும் தசம எண் நிரையில் அடுத்து வர வேண்டியதைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 0.1 | 0.4 | 0.7 | .................... |

1. 0.10  2. 1.0  3. 1.10  4. 0.01

**09. பரீட்சை எண் : 14**
**வினா இலக்கம் - 17**

விளக்கம் : 0.1 + 0.3 = 0.4
0.4 + 0.3 = 0.7
0.7 + 0.3 = 1.0

---

**கீழே தரப்பட்டுள்ள கூட்டல் கணிப்புகளை அவதானித்து வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**




7. ○ × △ = ......................... 1. 4  2. 1  3. 6  4. 8

8. □ × ▭ = ......................... 1. 4  2. 1  3. 6  4. 8

9. □ - ○ = ......................... 1. 4  2. 1  3. 6  4. 8

10. ○ + △ + □ - ▭ = ..................... 1. 4  2. 1  3. 6  4. 8

**10. பரீட்சை எண் : 15**
**வினா இலக்கம் - 7, 8, 9, 10**

விளக்கம் : 6 ÷ 2 = 3 **வட்டம்,** 5-3=2 **முக்கோணம்**
6 - 2 = 4 **சதுரம்,** 5-4=1 **செவ்வகம்**

**எனவே 7 ஆவது வினாவில்** 3 x 2 = 6, **8 வது வினாவில்** 4 x 1 = 4
**9 ஆவது வினாவில்** 4 - 3 = 1, **10ஆவது வினாவில்** 3+2+4-1=8

---

11. A 


B 


A ப் பெரிய சதுரமுகிக் கட்டையிலிருந்து B ச் சிறிய சதுரமுகிக் கட்டைகள் பெறக்கூடிய எண்ணிக்கை யாது?

1. 16  2. 32  3. 64

12. 


1. அப்பெரிய முக்கோண வடிவத்திலிருந்து C போன்ற மிகச் சிறிய எத்தனை முக்கோணிகள் பெறலாம்?
   1. 4  2. 8  3. 16
2. மிகச் சிறிய முக்கோணியின் சுற்றளவு 3cm ஆயின் மிகப் பெரிய முக்கோணியின் சுற்றளவு யாது?
   1. 12 cm  2. 18 cm  3. 24 cm

**11. பரீட்சை எண் : 15**
**வினா இலக்கம் - 11, 12**

விளக்கம் : **11. A பெரிய சதுரமுகி**
**B ச் சிறிய சதுரமுகி**

**64** 


**12. A பெரிய முக்கோணத்தில்**
**C சிறிய முக்கோணம்** 

= 3cm

**16** 

**பெரிய முக்கோணியின்**
**ஒரு பக்கம் 4 cm**
**4cmx3 = 12cm**

---

20. 6543 ⟶ 3654 எனின் 2345 ⟶ ......................
   1. 4235  2. 5234  3. 3452
21. 6969 ⟶ 6969 எனின் 6069 ⟶ .................
   1. 9609  2. 6069  3. 6909

**12. பரீட்சை எண் : 15**
**வினா இலக்கம் - 20, 21**

விளக்கம் : **20. 6543 → 3654 எனின்**
**2345 → 5234 ஆகும்.**
**21. 6969 தலைகீழாக அதாவது 180° திருப்பிப் பார்த்தால் 6969 எனின்**
**6069 தலைகீழாக அதாவது 180° திருப்பிப் பார்த்தால் 6909 ஆகும்.**

---

22. தரப்பட்ட கணிதச் செய்கைகளுக்கு ஏற்ப வெற்று அடைப்புக்கு வரவேண்டிய வடிவம் எது?




1.   2.   3. 

**13. பரீட்சை எண் : 15**
**வினா இலக்கம் - 22**

விளக்கம் :
**முதல் நிரல்** △ + △ + △ = 9
**எனவே** 9 ÷ 3 = 3 = △ **முக்கோணி 3**
**இரண்டாம் நிரை** △ + □ + □ + △ = 8
8 - 3 - 3 = 2 **எனவே சதுரம் : 1**
**முதல் நிரை** △ + ○ + □ + △ = 9

3 + 0 + 1 + 3 = 9 - 7 = 2
9 - 7 = 2 **எனவே வட்டம்** = 2
**மூன்றாவது நிரல்** □ + □ + 2 = 4
1 + 1 + 2 = 4
**மூன்றாவது நிரை** △ + △ + 2 + □ = 9
3 + 3 + 2 + 1 = 9 **எனவே** ○

**கீழுள்ள ஐந்து உருக்களையும் அவதானித்து விடை அளிக்குக.**




**இவ்வுருக்களிலுள்ள ஒரு வட்டத்தின் பரப்பளவு 16 சதுர cm ஆகும்.**

2. 16 சதுர cm பரப்பளவுடைய உருக்களைக் குறிக்கும் இலக்கங்களை எழுதுக. ............................
3. 16 சதுர cm இலும் குறைந்த பரப்பளவுடைய உரு யாது? ........................................................................
4. 16 சதுர cm இலும் கூடிய பரப்பளவுடைய உருக்கள் எவை? .................................................................

**14. பரீட்சை எண் : 17**

**வினா இலக்கம் - 2, 3, 4**

விளக்கம் : **2. நான்கு கால் வட்டங்கள் சேர்ந்தவை 1, 2 உம்**
**3. நான்கு கால் வட்டங்களிலும் குறைந்தது 3**
**4. நான்கு கால் வட்டங்களிலும் கூடியவை 4, 5 உம்**

5. வித்தியா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்குச் செல்வாள். அவள் ஒரு மாதத்தில் கோயிலுக்குச் சென்ற திகதிகளைக் குறிக்கும் சரியான விடை யாது?

1. 5, 12, 20, 27 2. 5, 12, 19, 25 3. 5, 12, 19, 26

**15. பரீட்சை எண் : 17**

**வினா இலக்கம் - 5**

விளக்கம் : **வாரத்தில் ஏழு நாட்கள் எனவே $+7$ பொது வித்தியாசம் உள்ள விடை பொருத்தமானது**
$5+7=12+7=19+7=26$

7. சதுரங்களினுள் உள்ள மூன்று இலக்கங்களை எத்திசையிலும் நேராகக் கூட்டும்போது விடை 21 ஆக வருதல் வேண்டும். ஆகவே வெற்றுக் கூடுகளுக்குள் வரவேண்டிய இலக்கங்கள் எவை?

1. 7, 8 2. 6, 7 3. 8, 9

| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | | 9 |
| 10 | 3 | |

**16. பரீட்சை எண் : 17**

**வினா இலக்கம் - 7**

விளக்கம் : **1 இலிருந்து 9 வரை அமைத்தால் 15 உம்**
**2 இலிருந்து 10 வரை அமைத்தால் 18 உம்**
**3 இலிருந்து 11 வரை அமைதத்தால் 21 உம்**
**4 இலிருந்து 12 வரை அமைத்தால் 24 உம்**
**$+3$ பொது வித்தியாசம்**

**கோலம் ஆக்கும் முறை**
**1 2 3**
**4 5 6 என எழுதி**
**7 8 9**

**அவற்றை கீழ் உள்ளவாறு பிரிக்கவும்.**




**பின் 1,3,7,9 ஐ எதிரெதிர்ப்பக்க கூடுகளில் இட்டால்**

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

**3 இலிருந்து 11 வரையான கோலம்**




| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | 7 | 9 |
| 10 | 3 | 8 |

11. ஒரு நாள் எமது வகுப்பறையில் சுற்றாடற் பாடத்தின் பின் ஆங்கிலப் பாடம் நடைபெற்றது. தமிழ்ப்பாடம் நடைபெறுவதற்கு முன் கணிதபாடம் நடைபெற்றது. ஆங்கிலப்பாடம் முடிந்த பிறகு சித்திரப்பாடம் நடைபெற்றது. ஆங்கிலப்பாடத்திற்கும் தமிழ்ப்பாடத்திற்கும் இடையில் சுற்றாடற் பாடம் நடைபெற்றது. ஆகவே அன்றைய தினம் பாடங்கள் நடைபெற்ற சரியான ஒழுங்கு முறை எது?

1. கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம், தமிழ்
2. கணிதம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்
3. தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்

**17. பரீட்சை எண் : 17**

**வினா இலக்கம் - 11**

விளக்கம் :**தகவல்கள் ஒழுங்கு: 01. சுற்றாடல், ஆங்கிலம்**
**02. கணிதம், தமிழ்**
**03. ஆங்கிலம், சித்திரம்**
**04. தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்**
**ஒழுங்கமைத்தால் 2 $\rightarrow$ 4 $\rightarrow$ 3**

12. ரூபன், ரூபி, மயூரி ஆகிய மூவரும் ஒரு கல்விச் சுற்றுலா சென்ற போது தாங்கள் அணிந்திருந்த ஆடையில் இருந்த நிறங்களைக் கூறினார்கள். ரூபனின் உடையில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கள் இருந்தன. ரூபியின் உடையில் மஞ்சள், கறுப்பு, நீல நிறங்கள் இருந்தன. மயூரியின் உடையில் வெள்ளை, மஞ்சள், ஊதா நிறங்கள் இருந்தன. மூவரினதும் உடைகளில் இருந்த ஒரே நிறம் எது?

1. மஞ்சள் 2. பச்சை 3. நீலம்

**18. பரீட்சை எண் : 17**

**வினா இலக்கம் - 12**

விளக்கம் :

**விடை மஞ்சள்**

